# சங்ககால மரபும் சமகால பண்பாட்டுஅரசியலும்-ஜல்லிக்கட்டு

**பா.மாரிமுத்து.**

**நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை,**

**நிகழ்த்துக்கலைப்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,**

**மதுரை.625021.**

**2**

**ஆய்வுச்சுருக்கம் :**

சங்ககால மரபு ஜல்லிக்கட்டு, இது ஏறுதழுவுதல், மஞ்சுவிரட்டு, தம்பிரான் ஓட்டம், சலக் எருது, எருது கட்டு வடமஞ்சுவிரட்டு, வாடிவாசல் ஜல்லிக்கட்டு, வெளிவிரட்டு, என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது இன்று ஒரு பண்பாட்டு அரசியலுக்குள் சிக்கியுள்ளது. இந்தக் கட்டுரை இந்த பண்பாட்டு அரசியலைப் பேசுகிறது.

**முன்னுரை :**

ஜல்லிக்கட்டு என்பது சங்ககால மரபு என்று கூறும் அதே நேரம், தமிழ் மொழி அல்லாத ஆந்திரம், கர்நாடகம், மற்றும் சில வடமாநிலங்களில் ஜல்லிக்கட்டு வேறு வடிவங்களில் நடத்தப்படுகிறது. இதுவும் ஜல்லிக்கட்டுதானா என்பது பெரிய ஆய்வுப்பொருள். இருப்பினும் மனித இனம் இயற்கையை நம்பியே வாழத் துவங்கியது.இது கண்டுபிடித்த அறிவியல் கூறு என்பது, விலங்குகளைப் பழக்குதல். இவ்வாறு உலகில் வாழும் அனைத்து மனித இனமும் விலங்கினுடன் பழகுதலையும் அதனைப் பழக்குதலுக்கும் உட்பட்ட ஒரு வாழ்வியலையே சந்திந்தன.வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ் மறுமலர்ச்சி என்ற நூலில் குறிப்பிடும் போது தமிழ் பேசும் ஒரு குழந்தையை வேற்று மொழியாகி ஆங்கிலமோ, தெலுங்கோ போசும் சூழலில் வளர்த்தால் அதுவும் வேற்றுமொழியான ஆங்கிலம், தெலுங்கைத்தான் பேசும் என்கிறார். எனவே இது சூழல் சார்ந்தது என்கிறார். மேலும் மனிதன் பேசும் மொழி தனது எண்ணங்களை வெளிப்படுத்தும் நிகழ்வே ஆகும்.நம்மிடம் பழகும் விலங்குகளும் நம்மோடு பேசுகின்றன பழகுகின்றன என்கிறார். எனவே மொழியைக் கடந்த இந்த விலங்கினங்களோடான வாழ்வியலில் மனிதன் விலங்கு என்னும் இரு உயிரினங்களுக்கு இடையேயான பந்தமே ஆகும். இந்த பந்தம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் பிற்காலத்தில் இதில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த மாற்றங்கள் ‘வலியது வாழும்’ என்பதற்கோற்ப அதிகாரவர்க்கம் தீர்மானிப்பதே சட்டமாக உருவானது. மாற்றம் ஒன்றே மாறாதது எனவே இந்த மாற்றத்தில் அதிகாரவர்க்கம் தனக்குச் சாதகமானதை, தனது தேவையை நிறைவேற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டது.இதுதான் தனக்கான அரசியலை உருவாக்கிக் கொள்வது.இயல்பாகவே அதிகாரவர்க்கத்தால் புறம்தள்ளப்பட்ட வர்க்கம் இதில் இடம்பெறவில்லை. சங்க இலக்கிய காலத்திலும் சாதி என்ற சொல் இல்லை என்றாலும் பேதங்கள் அடக்குமுறைகள் இருந்தது என்று பேராசிரியர் தனஞ்செயன் போன்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.சித்தர்கள் காலத்திலேயே சாதி இருந்தது என்றும் குறிப்பிடுவார்.எனவே இது பண்பாட்டில் வலுவாக

எதிரொலித்தது.இது இக்காலம் வரை தொடர்கிறது.

**சங்ககால ஏறுதழுவுதல்-ஜல்லிக்கட்டும்-சல்லிக்கட்டும்:**

சங்ககாலத்தில் குறிப்பாக மணிமேகலையில் ஜல்லிக்கட்டு அணைவது போன்ற ஏற்தலுவல் விளையாட்டு முறையாகவும் குறிப்பாக பெண்களை திருமணம் செய்ய உகந்த மணகனைத் தேர்வுசெய்யும் விதமாக இந்த விளையாட்டு இருந்திருக்கிறது. பின் மாடுகளின் கழுத்திலும் கொம்பிலும் சல்லிக்காசுகளைக் கட்டி அதனை அவிழ்க்கும் ஒரு விளையாட்டு முறையாக மாறியுள்ளது. அதனால் சல்லிக்கட்டு என்றானது. இது பின்னாளில் ஜல்லிக்கட்டு என்றானது.குறிப்பாக தமிழ்மொழி அல்லாதா பிற மொழி பேசுவோர்,அல்லது தமிழ்மொழி உச்சரிப்பு அறியாத ஆங்கிலேயர் காலத்தில் இந்தச் சொல்லாடல் வந்திருக்கலாம். சல்லிக்கட்டு ஜல்லிக்கட்டாக உச்சரிக்கப்பட்டு மருவி இருக்கலாம்.சங்ககால எறுதழுவலே ஜல்லிக்கட்டு ஆகும்.

**சல்லிக்கட்டா-மஞ்சுவிரட்டா:**

சங்ககால விளையாட்டு ஜல்லிக்கட்டா அல்லது மஞ்சுவிரட்டா என்று கல்வெட்டுத்துறை ஆய்வாளர் காந்திராசன் கேள்விஎழுப்புகிறார். ஏறுதழுவுதல் போன்ற விளையாட்டு கட்டாயச் சடங்கு முறையாக சங்ககாலத்திலேயே இருந்திருக்கிறது.இது மஞ்சுவிரட்டாகவோ அல்லது ஏறுதழுவலாகவோ இருந்திருக்கிறது. கல்வெட்டு ஆதாரங்களும் இவற்றைச் சான்றாக நிரூவுகின்றன. இது காளையைக் கொண்டு நிகழ்ந்திருக்கிறது. இன்றும் தமிழின் கிளைமொழிகளாம் தெலுங்கு, கர்நாடகம் போசும் மக்களிடமும் காளை விளையாட்டுகள் மரபான சடங்காகவும் விளையாட்டுகளாகவும் இருக்கிறது.

**சமகால பேதங்கள் :**

இன்று நடைபெறும் ஜல்லிக்கட்டில் சாதிய போதங்கள் நடக்கின்றன.பிரபலங்கள் அதிகமாக ஈர்க்கப்படுகின்றனர். இது கட்டாய அதிகார அரசியலுக்கு வழிவகுக்கும். ‘வலியது வாழும்’ என்ற நிலையில் அதிகாரத்தால் புறம் தள்ளப்படுவோர் பல்வேறு அடக்குமுறைகளை சந்திக்க நேரிடும். இவற்றை களாய்விலும் காணமுடிகிறது. விராட்டிபத்து கண்ணன்-2019 –அலங்காநல்லூர். இவர் தனது பதினைந்து வயதிலிருந்தே காளை அணையும் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்.இவர் தான் ஜல்லிக்கட்டில் பல்வேறு அடக்குமுறைகளை கண்டுள்ளேன். இப்பொழுதும் நடக்கிறது யாரும் தைரியமாக அதைச் சொல்ல முன்வருவதில்லை என்கிறார். அரசு வேலைகளில் தங்கள் கல்வித்தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் அதைசார்ந்த ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் முன்னுரிமையும் தரவேண்டும் என்று தனது ஆதங்கத்தை இயல்பாக பதிவுசெய்தார்.

**ஆரசியல் :**

தனக்குச்சாதகமான எந்த ஒன்று செயல்பாடும் அரசியலே ஆகும்.அரசியல் என்பது நிர்வாக முறை, படை, அமைச்சு, குடி, கூழ் என்று தமிழகராதி அரசியலுக்கு பல்வேறு சொற்களையும் பொருளையும் வழங்குகிறது அடிப்படியில் ஆதிமனிதன் தனக்குத் தேவையான உணவினை பங்கு பிரித்தலிலிருந்து உருவானதே அரசியல் ஆகும். எனவே அரசியல் என்பது ஒரு நிர்வாக முறை.

**பண்பாட்டு அரசியல் :**

மனிதன் பண்பாட்டுக்குள்ளாகதான் வாழ்கிறான். பண்பாடு என்பது ஒரு சூழல்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடும் சூழல் முக்கியத்துவம் இங்கு மிகமுக்கிய இடம்பெறும். மொழி ஒரு ஊடகமே என்ற போதும் எந்த ஒரு பண்பாட்டிற்கும் ஆணிவேர் போன்றது மொழி. அதே நேரம் மொழி ஒரு கருத்துப் புலப்படுத்த ஊடகம்.மொழி பண்பாட்டின் ஒரு கூறு, அலகு ஆகும். மேலும் இதுதான் பண்பாடு! என்பதற்கான அளவுகோள் என்று எதுவும் வரையறுக்கப்படவில்லை. மேலும் பண்பாடு ஜீவனுள்ளது. இது வளர்ந்து கொண்டே, இயங்கிக் கொண்டே இருக்கும். இன்றைய ஜல்லிக்கட்டு நாளை இணையத்திலும் பிறபலமாகலாம். எனவே சூழல்தான் பண்பாடு என எளிமையாகக் கூறலாம். அதிகாரவர்க்கம் தங்களுக்குச் சாதமகான சூழலை உருவாக்குகிறது. பண்பாடு கருத்தாக்கங்களால் ஆனது என்கிறார் நா.முத்துமோகன். எனவே அதிகாரவர்க்கம் இந்த கருத்தாக்கங்களை உருவாக்குகிறது. இவ்வாறு பண்பாட்டின் பெயரால் நடத்தப்படும் அரசியல் பண்பாட்டு அரசியல்

**பண்பாட்டு அடையாள உருவாக்கமா? :**

சங்ககால ஏற்தழுவல், கொல்லேறு தழுவல் என்பது, சல்லிக்கட்டாகி இன்று ஜல்லிக்கட்டாக உள்ளது. மதுரையின் அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டே உலகப் புகழ் பெற்றது என்று மதுரைக்கான பண்பாடாக, குறிப்பாக தமிழ்மொழியைக் கொண்ட தமிழர்களுக்கான ஒரு ஒற்றை அடையாளமாக ஜல்லிக்கட்டினை உருவாக்குகின்றனர். குறிப்பாக மதுரைக்கான பண்பாட்டு அடையாளமாக ஜல்லிக்கட்டினை உருவாக்குகின்றனர். ஜல்லிக்கட்டினைப் போல ஆட்டுக் கெடாமுட்டு, சேவல் சண்டை, மாட்டு வண்டிப் போட்டி, இரட்டை மாட்டுவண்டி போட்டி, ஒற்றை மாட்டுவண்டி போட்டி, பன்றிக்கட்டு போன்ற பல்வேறு பண்பாட்டு நிகழ்வுகள் உள்ளன.

**IKS-Indigenous Knowledge system :**

வேளாண்மை சார்ந்த மரபான அறிவு உருவாக்க முறை ஏறுதழுவல் ஏனெனில் ஜல்லிக்கட்டு மாட்டினை கிடையில் வளர்ப்பர். கிடை-வயல் நிலம் எனவே இயற்கை உரத்தினால் வயல் செழிப்புறும். வரப்புயர நீர் உயரும். நீர் உயர நெல்லுயரும். நெல்லுயர குடிஉயரும். குடிஉயர கோலுயரும். கோலுயர கோனுயரும். ஏறுதழுவுதல் என்பது முல்லை நிலப் பண்பு, மருத நில வேளாண் அறிவு ஆகும். மேலும் மாட்டினை வேளாண்மைக்குப் பழக்குதல். மொய், பரிசம் போடுதல், சுயம்வரம் போன்ற ஏற்ற துணையை தேர்வுசெய்யும் ஒரு இனக்குழுவின் முறை (டி.தருமராஜ் : 2021, தமிழறம்) ஆனால் தற்போது நாட்டு மாடுகளை காப்பாற்றுதல் என்ற காருண்யத்தால், மீட்கப்பட்டது ஜல்லிகட்டு என்ற கருத்தாக்கத்தால், இயற்கைச் சூழலான நாட்டின் நிலம் சார்ந்த வாழ்வியல் மறக்கப்படுகிறதா? நாட்டின் வளமான நிலத்தையும் வளங்களையும் முறையாக நிர்வாகம் செய்தால் நாட்டு மாடுமட்டுமல்ல நாட்டு நாய் நாட்டுக் கோழி என்று நாம் இழந்த அனைத்துமே தானாக மீட்டுருவாகலாம். இயற்கை அறிவியலை நேசிப்போமா?.சூழல் சார் வாழ்வியலுக்குத் திரும்புவோமா?

**முடிவுரை :**

ஏறுதழுவுதல், மஞ்சு விரட்டு, சல்லிக்கட்டு, ஜல்லிக்கட்டு, வாடிவாசல் ஜல்லிக்கட்டு, வெளிவிரட்டு, தம்புரான் விரட்டு, சலக்கெருது, எருதுகட்டு என்றெல்லாம் அழைக்கப்பட்ட காளை

விளையாட்டு இன்று பெறும் அரசியல் விளையாட்டாக மாறியுள்ளதா? இது மதுரைக்கான பண்பாட்டு அடையாளமாக உருவாக்கப்படுகிறதா? என்ற கேள்வியை முன்வைத்து இந்த கட்டுரை அமைகிறது.

**துணை நூல பட்டியல்:**


- எஸ்.வையாபுரிப்பிள்ளை, (1989), தமிழின் மறுமலர்ச்சி-இரண்டாம் தொகுதி, சென்னை.
- பக்தவச்ல பாரதி, (1999), பண்பாட்டு மானிடவியல், சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
- முத்துமோகன்.நா, (2013), வர்க்க அரசியலும் அடையாள அரசியலும்.
- கோபிநாத்.தி, (2021), பண்பாட்டு அடையாளங்கள், சென்னை.
- பா.ச.அரிபாபு,இரா.கர்த்திக் (சி.ஆ) கவிதா செந்தில்குமார் (தொ.ஆ) செந்நெல் (2021,இதழ்-3,தொ.-2), தமிழறம், நாட்டுப்புறவியல் சிறப்பிதல், மதுரை, நாட்டுப்புறவியல் மற்றும் நிகழ்த்துக்கலைப்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.